GWOP 246/2023

நாள் 14.11.2024.

ம.சா 2

பெயர் கார்த்திக்

**1 மற்றும் 2 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கள்ளக்குறிச்சியில் உள்ள டாக்டர். RK. சண்முகம் என்ற தனியார் கல்லூரியில் விரிவுரையாளராக பணிபுரிந்து வருகிறேன். மனுதாரரை எப்படி தெரியும் என்றால் அவர் என்னுடைய school mate அதனால் அவரை சிறுவயது முதல் தெரியும். அவரை எனக்கு நீண்ட நாட்களாக தெரியும் என்பதால் இந்த கோர்ட்டுக்கு வாய்தா தேதிகளில் அவருடன் வந்துள்ளேன்என்றால் மூன்று வாய்தாக்களுக்கு வந்துள்ளேன். திருமணத்திற்கு எவ்வளவு மனுதாரர் வீட்டில் செலவு செய்தார்கள் என்றால் ஒரு 7, 8 லட்சம் ரூபாய் செலவு செய்தார்கள். பெண் வீட்டில் எவ்வளவு நகை போட்டார்கள் என்றால் எந்த நகையும் போடவில்லை என்றுதான் மனுதார் சொன்னார். எதிர் மனுதாரர் குடும்பத்தார்கள் தான் திருமணத்திற்கு 10 லட்சம் ரூபாய் செலவு செய்து 32 சவரன் நகை போட்டார்கள் என்றாலும் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மண்டப செலவு எவ்வளவு செலவானது என்றால் 1 லட்சம் ரூபாய் என்று நினைக்கிறேன். சரியாக ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்கும் நடந்த பிரச்சனை குறித்து பேச்சு வார்த்தை நடந்ததாக சொல்லியிருப்பதால் அந்த சமயத்தில் நானும் பாண்டியராஜனும் இருந்தோமா என்றால் இருந்தோம். எந்த தேதியில் நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை. 2020 பிப்ரவரி மாதத்தில் நடந்தது. இலக்கியா எந்த தேதியில் எதனால் இறந்தார் என்றால் ஜீலை மாதம் 2020 ல் இறந்தார். பாண்டியராஜன் இலக்கியாவிற்கு டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பினார் அந்த நோட்டீஸ் கிடைத்த அன்று இறந்ததாக கேள்விப்பட்டேன். அந்த இறப்பிற்கு நான் போனேனா என்றால் இல்லை. பாண்டியராஜன் நியூசிலாந்தில் இருந்ததால் போகவில்லை. பாண்டியராஜன் குடும்பத்தினர் போனார்களா என்றால் இல்லை. இலக்கியா இறந்த செய்தி தெரிந்தவுடன் பாண்டியராஜன் குடும்பத்தினர் வீட்டை பூட்டிக்கொண்டு வெளியூர் போய்விட்டார்கள் என்றால் சரி. நான் தாக்கல்

செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பாரா 6ல் மனுதாரர் தனது மைனர் குழந்தையை பார்க்கச்செல்லும்போதெல்லாம் எதிர்மனுதாரர்கள் உன்னால் தான் என் மகள் இறந்தார் என்று சொல்லி குழந்தையை சந்திக்க அனுமதிக்கவில்லை என்று சொல்லியிருப்பதால் நானும் பாண்டியராஜனுடன் குழந்தையை பார்க்கபோனேனா என்றால் 2 முறை போனேன். எதிர் மனுதாரர்கள் மைனர் குழந்தையுடன் தாங்களும் தற்கொலை செய்து கொள்வதாக அவ்வப்போது மிரட்டி வந்ததாக பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பாண்டியராஜன் மீண்டும் நியூசிலாந்துக்கு போய் வேலை பார்ப்பார் என்றால் இப்போது வேலையை விட்டு விட்டு வந்துவிட்டார். இனிமேல் life எப்படி போகும் என்று தெரியவில்லை. பாண்டியராஜன் என் நண்பர் என்பதால் இல்லாத விசயங்களை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தை எதிர்மனுதாரர்களிடம் பாதுகாப்பாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல.